## இலங்கை சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் சங்கங்களின் பிரதிநிதிகளின் கூட்டு அறிக்கை

இலங்கையின் பல்வேறு பிராந்தியங்களில் பணிபுரியும் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் சங்கங்களின் பிரதிநிதிகளான நாங்கள், பெண்களுக்கான மனித வியாபாரத்திற்கு எதிரான உலகளாவிய கூட்டணியுடன் இணைந்து, இலங்கைப் பெண்களின் பாதுகாப்பான மற்றும் நியாயமான தொழிலாளர் புலம் பெயர்வு தொடர்பான இரண்டு நாள் கலந்துரையாடலை நிறைவு செய்துள்ளோம் .

இந்த கலந்துரையாடலில் பங்கேற்ற சிவில் சமூக பிரதிநிதிகள் கிழக்கிலங்கை தன்னம்பிக்கை சமூக எழுச்சி நிறுவனம் எஸ்கோ, மனித உரிமைகள் மற்றும் சமூக மேம்பாட்டு மையம், சமூக மேம்பாட்டு சேவைகள், பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டு, புலம்பெயர்ந்தோர் குரல் வலையமைப்பு, பிரிடோ , சுவாட் , சமாதானம், , Fபர்ம் , சேப் பவுன்டேன் நிறுவனம் மற்றும் . குருநாகல், மட்டக்களப்பு, புத்தளம், அனுராதபுரம், அம்பாறை, கண்டி, வவுனியா மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோர் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பங்கேற்பாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

கடந்த இரண்டு நாட்களில், எங்கள் கருத்துப் பரிமாறல்கள் தொழிலாளர் புலம்பெயர்வின் அனைத்து நிலைகளிலும் கவனம் செலுத்தியது:

**புறப்படுதலுக்கு முன்னரான தீர்மானம் எடுத்தல்,** புறப்படுதலுக்கு முன்னரான ஏற்பாடு , வெளிநாட்டில் வேலை செய்யும் போது மற்றும் அவர்கள் திரும்பியவுடன் வாழ்க்கை போன்ற விடங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன. புலம்பெயர்ந்தோர் சங்கங்களின் ஆய்வு, பரிந்துரைகள் , கள மட்டப் பணிகள் மற்றும் இவற்றால் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதிமிக்க வாழ்க்கை அனுபவம், சமூக ஈடுபாடு ஆகியவற்றுடன் எங்களது நீண்ட அனுபவத்தின் அடிப்படையில், பின்வரும் பரிந்துரைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முன் வைக்க விரும்புகிறோம். எங்கள் பரிந்துரைகள் கருத்தில் கொள்ளப்படும் என்று நாங்கள் உண்மை உணர்வுடன் எதிர்பார்க்கிறோம்

### புறப்படும் முன் நோக்குநிலை

28-நாள் புறப்படுவதற்கு முந்தைய நோக்குநிலை பயிற்சி (PDO) புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், குறிப்பாக குறைந்த ஊதியத்தில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள், அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும் நிலைநிறுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். அத்தோடு புறப்படுவதற்கு முந்தைய நோக்குநிலை திட்டங்களுக்கான பாடத்திட்டங்களை மேம்படுத்தும் முயற்சியில் திரும்பிய புலம்பெயர்ந்த பெண்களின் அனுபவங்கள் மற்றும் அவர்களின் அக்கறைகளையும் உள்வாங்கி அவர்களின் ஈடுபாட்டை மேம்படுத்த அரசு முன்வர வேண்டும்.

• பயிற்சிக்கான வசதிகள் மற்றும் உபகரணங்களை நவீனமயமாக்குவதில் முதலீடு செய்யுங்கள். மற்றும் பயிற்சி திட்டங்கள் மாவட்ட மட்டத்தை அடையக் கூடிய இடங்களுக்கு பரவலாக்குதல் வேண்டும்

• புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு மொழித்திறன், தொழில்நுட்ப திறன்கள் மற்றும் இலக்கு நாடுகளின் பின்னணி அறிவு ஆகியவற்றைக் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் பயிற்சி பாடத்திட்டங்களை மறுஆய்வு மற்றும் மீள் மதிப்பீடு செய்யும் செய்ற்பாட்டில் புலம்பெயர்ந்த சங்கங்களை கலந்தாலோசிக்க வேண்டும்.

• நாடு திரும்பும் புலம்பெயர்ந்தோரின் வாழ்க்கை அனுபவங்களை அங்கீகரித்து புலம்பெயர்ந்து திரும்பியவர்கள் பயிற்சித் திட்டங்களில் வளப்பகிர்வு செய்வதற்கான வாய்ப்புகளை வழங்கி அனுமதித்தல்.

**ஆட்சேர்ப்பு**

அதிகரித்த சம்பளம் பெற்றுக் கொடுத்தல், ஒப்பந்த மீறல்கள், மனித வியாபாரம், இரட்டை ஒப்பந்தம் கையொப்பமிடுதல் போன்ற ஆட்சேர்ப்பு முறைகேடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவும்.

• ஆட்சேர்ப்பு முறைமைகள் தொடர்பாக தற்போதுள்ள நெறிமுறைகள் மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளை செயல்படுத்துவதை உறுதி செய்தல்.

• இடைத்தரகர்கள் செய்ற்பாடுகளை நெறிப்படுத்தி அங்கீகரித்து முறைப்படுத்துதல்,

• முன்பு நடைமுறையில் இந்த வேலைவாய்ப்பு பணியக அலுவலகத்தில் தொழிலாளர்களின் சொந்த மொழியில் (உதா. சிங்களம் மற்றும் தமிழ்) தொழில் ஒப்பந்தங்களில் கையொப்பமிடும் செயல்முறையை மீண்டும் நடைமுறைப்படுத்துதல்.

• ‘விசிட் வீசா’ மூலம் புலம் பெயரும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப்

பணியகத்தில் பதிவு செய்வதற்கு வசதியாக அவர்கள் தொடர்புகொள்வதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் அர்ப்பணிப்புடன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**வெளிநாட்டில் வேலையில் இருக்கும்போது**

• தொழிலாளர் உரிமைகள் பாதுகாத்தல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த இருதரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை வலுப்படுத்துதல்.

• பாதிக்கப்பட்டு துன்பத்தில் இருக்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சட்ட மற்றும் உளவியல்-சமூக ஆதரவை பெற்றுக்கொள்ள வசதியாக இலக்கு நாடுகளில் உள்ள தூதரகங்கள் மற்றும் தூதரக அலுவலகங்களின் செயற்பாட்டுப் பரப்பை விரிவுபடுத்துதல்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் புகார்களை கையாள்வதற்கு வசதியாகவும் இலகுவாகவும் தாக்கமுள்ளதுமான தொடர்பாடல் வழிமுறைகளை உருவாக்குதல்

• துஷ்பிரயோக சம்பவங்களை கையாள்வதில் முதலாளிகளுக்கும் ஏஜென்சிகளுக்கும் இடையே தூதரகம் ஒரு இணைப்பாகச் செயல்பட வேண்டும்

• தூதரக உதவி சேவைகள் பால்நிலை உணர்வூட்டல் உள்ளததாக இருக்க வேண்டும். மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகளில் துன்பப்படும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்க்கபடும் மனிதாபிமான ஆதரவின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும்.

• இலக்கு நாடுகளில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள தொழில் உத்தியோகத்தர்கள் உணர்வூட்டமுள்ளவர்களாகவும் தொழிலாளர் பிரச்சனைகளை மனிதாபிமான ரீதியில் கையாண்டு பதிலளிக்கும் வகையில் வலுப்படுத்தப்பட வசதியாக அவர்கள் உகந்த பயிற்சிக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

• புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வெளிநாட்டில் பணிபுரியும் போது அவர்கள் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்தக் கூடியதாக வசதிசெய்து தரப்பட

வேண்டும் (பிலிப்பைன்ஸில் நடைமுறையில் உள்ளது போது பிரசன்னமாக இல்லாத போதும் துர இருந்து வாக்களிக்கும் முறையை உருவாக்குங்கள்).

• புலம்பெயர்ந்தோரின் நலனைக் கருத்தில் கொண்டு நலன்புரி திட்டத்திற்கான பதிவுக் கட்டணத்தின் சதவீதத்தை 10% லிருந்து 30% ஆக உயர்த்தவும்.

**நாடு திரும்பியதன் பின்னரான உரிமைகள்**

நாடு திரும்புதல் மற்றும் மீண்டும் ஒருங்கிணைத்தல் திட்டங்கள் திரும்பி வருபவர்கள் மற்றும் அவர்களின் சமூகங்களின் சமூக-பொருளாதார சவால்களை மேற்கொள்வதற்கு வாய்ப்ளிப்பதாக இருக்க வேண்டும்.

• புலம்பெயர்ந்த பெண் தொழிலாளர்களின் மதிப்புமிக்க பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலும் சமூக ரீதியாக அவர்கள் ஓரம் கட்டப்படுவதை தவிர்க்கவும் சிறந்த பொது சேவைகள் மற்றும் கீழ்மட்டத்தில் நலன்களை பெறக்கூடிய வகையில் அரசு, வளங்களை முதலீடு செய்ய வேண்டும்.

• பெண் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களை வழங்குவதன் மூலமும், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவுக்கான வாய்ப்புகளை அணுகுவதறகு வாய்ப்பளிப்பதன் மூலமும், திரும்புதல் மற்றும் மறு ஒருங்கிணைப்பு துணைக் கொள்கையை தாக்கமுள்ள முறையில் செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பை உறுதி செய்தல்.

• அனைத்து பெண் தொழிலாளர்களுக்கும் திறன் மேம்பாடு திட்டங்களுக்கான அணுகலை உறுதி செய்தல் மற்றும்; NVQ நிலை சான்றிதழ்களுக்கு RPL முறையை தாக்கமுள்ள முறையில் செயல்படுத்துதல்.

• திரும்பிய புலம்பெயர்ந்தோருக்கான ஓய்வூதிய திட்டங்களை உருவாக்குதல்.

• சிறப்புப் பலன்களை பெற்றுக்கொள்ள வசதியாக (சுகாதாரம், பொதுப் போக்குவரத்து, வங்கி போன்றவை) புலம்பெயர்ந்து திரும்பியவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல்

• புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பான தற்போதைய கற்கை ஆய்வுகளை அங்கீகரித்தல் மற்றும் பெண்கள் மற்றும் சமூகங்கள் மீதான தொழிலாளர் புலம்பெயர்வின் தாக்கத்தை புரிந்துகொள்வதற்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களில் போக்குகள் மற்றும் மாதிரிகளை ஒருங்கிணைத்தல்.

• புலம் பெயர்தலை மையமாகக் கொண்ட திட்டங்களை வலுப்படுத்த, புலம்பெயர்ந்தோர் சங்கங்களின் பங்கேற்பையும் ஈடுபாட்டையும் உறுதி செய்தல்.